**செய்தி வெளியீடு எண்:621** **நாள் : 05.12.2015**

**மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்குத் தட்டுப்பாடின்றி பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு கிடைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்கு, தட்டுப்பாடின்றி, பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு கிடைக்க உத்தரவிட்டுள்ளார்கள்

இந்த உத்தரவுப்படி, நேற்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்கு தட்டுப்பாடின்றி பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு கிடைக்க நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு க.சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் திரு சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களுடன் மாநில ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயல் இயக்குநர், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் திரு மன்னூர், காவல்துறை கூடுதல் ஆணையர் திரு தாமரைக்கண்ணன் மற்றும் இதர பெட்ரோலிய நிறுவனத்தினர் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையின்படி, தண்டையார்பேட்டை மற்றும் எண்ணூர் மொத்த விநியோக முனையங்களில் மழை வெள்ளம் காரணமாக, பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால், கொருக்குப்பேட்டையிலுள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகியவற்றின் மொத்த விநியோக முனையங்கள் மற்றும் எண்ணூரிலுள்ள ETTPL மொத்த விநியோக முனையம் ஆகியவற்றிலிருந்து பெட்ரோல் மற்றும் டீசல் பெறப்பட்டு கூடுதலாக விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் இதர பகுதிகள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து 475 கிலோ லிட்டர் பெட்ரோலும், 857 கிலோ லிட்டர் டீசலும் சங்ககிரியிலிருந்து 22 டேங்கர் லாரிகள்,

திருச்சியிலிருந்து 25 டேங்கர் லாரிகள், பெங்களூரிலிருந்து 10 டேங்கர் லாரிகள், சித்தூரிலிருந்து 10 டேங்கர் லாரிகள் ஆக மொத்தம் 67 டேங்கர் லாரிகள் மூலமாக பெட்ரோல் மற்றும் டீசல் சென்னைக்கு போர்க்கால அடிப்படையில் வரவழைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், இன்றைக்கு சென்னையில் 75 சதவீதம் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதேபோல், சமையல் எரிவாயு சிலிண்டர்கள், சென்னை மாநகர மக்களுக்கு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எண்ணூர், செங்கல்பட்டு மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், மணலியில் உள்ள Bottling Plant ஆகிய நிறுவனங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதில், எண்ணூர் மற்றும் மணலி பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளதால், விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகரத்திற்கு, செங்கல்பட்டிலிருந்து தினந்தோறும் 20 சரக்கு லாரிகள் மூலம் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில், மழை வெள்ளத்தின் காரணமாக தற்போது தினந்தோறும் செங்கல்பட்டிலிருந்து கூடுதலாக 90 சரக்கு லாரிகள் மூலமாகவும் சேலத்திலிருந்து கூடுதலாக 40 சரக்கு லாரிகள் மூலமாகவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகம் மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எண்ணூரில் உள்ள Bottling Plant-ல் உற்பத்தி துவங்கியுள்ளதால் விநியோகம் சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**